## ஆகாஷ் என்.ஜி. ஏவுகணை சோதனை வெற்றி: அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு


வானில் சீறிப் பாய்ந்த ஆகாஷ் என்.ஜி. ஏவுகணை.

**பாலசூர்:** புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணை சோதனை நேற்று வெற்றிகரமாக நடந்தது.

அதிவேகத்தில் வரும் விமானங்கள், ஏவுகணைகள், டிரோன்கள் ஆகியவற்றை வானில் இடைமறித்து அழிக்க, புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணையை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கியது. இதன்சோதனை ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில் (ஐடிஆர்) நேற்று மேற்கொள்ளப்பட்டது.

குறைந்த உயரத்தில் அதிவேகத் தில் பறந்து வந்த ஆளில்லா விமானத்தை, ஆகாஷ் என்.ஜி. ஏவுகணை வெற்றிகரமாக இடைமறித்து அழித்தது. இந்த பரிசோதனை மூலம் ஆகாஷ் என்.ஜி.ஏவுகணை, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண்கருவி, ஏவுதளம், ரேடார்,கட்டுப்பாடு மற்றும் தகவல் தொடர்புகருவிகளின் செயல்பாடுகள் மதிப்பிடப்பட்டன. பல ரேடார்களில் பதிவான தரவுகள், டெலிமெட்ரி, எலக்ட்ரோ ஆப்டிக்கல் கண்காணிப்பு கருவிகள் மூலமும் ஆகாஷ் ஏவுகணையின் செயல்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த ஏவுகணை சோதனையை டிஆர்டிஓ, விமானப்படை, பாரத்டைனமிக்ஸ் லிமிடெட், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனங்களின் அதிகாரிகளும் பார்வையிட்டனர். ஆகாஷ் என்.ஜி ஏவுகணை சோதனை வெற்றிக்காக டிஆர்டிஓ, விமானப்படை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையினரை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டினார். ஆகாஷ் என்.ஜி. ஏவுகணை உருவாக்கியுள்ளது, நாட்டின் வான் பாதுகாப்பு திறனை மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் கூறினார்.

## நாடாளுமன்ற கூட்டத் தொடர் 31-ம் தேதி தொடங்குகிறது: பிப். 1-ல் இடைக்கால பட்ஜெட் தாக்கல்



**புதுடெல்லி:** நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 31-ம் தேதி தொடங்குகிறது. பிப்ரவரி 1-ம் தேதி இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.


ஓராண்டில் நாடாளுமன்றம் 3 முறை கூடுகிறது. ஆண்டின் தொடக்கத்தில் பட்ஜெட் கூட்டத் தொடர், ஜூலையில் மழைக்கால கூட்டத்தொடர், நவம்பரில் குளிர்கால கூட்டத் தொடர் நடைபெறுகின்றன. வரும் ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 31-ம் தேதி தொடங்குகிறது. இதுதொடர்பாக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர்பிரகலாத் ஜோஷி சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

17-வது மக்களவையின் கடைசி கூட்டத் தொடரான இடைக்கால பட்ஜெட் கூட்டத் தொடர்ஜனவரி 31-ம் தேதி தொடங்குகிறது. இந்த கூட்டத் தொடரின் முதல்நாளில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுவார். பிப்ரவரி 1-ம் தேதி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வார். பிப்ரவரி 9-ம் தேதி வரை கூட்டத் தொடர் நடைபெறும். இவ்வாறு பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இடைக்கால பட்ஜெட் என்பதால் மிகப்பெரிய அறிவிப்புகள் இருக்காது. எனினும் இந்த பட்ஜெட்டில் பெண்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. குறிப்பாக பெண் விவசாயிகளுக்கான நிதியுதவி ரூ.6,000-ல்இருந்து ரூ.12,000 ஆக உயர்த்தப்படும் என்று கூறப்படுகிறது.

ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீடு திட்டத்தில் தற்போது ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. இந்தகாப்பீட்டுத் தொகை உயர்த்தப்படலாம் என்று தெரிகிறது. தனிநபர் வருமான வரி உச்ச வரம்பில் எவ்வித மாற்றமும் செய்யப்பட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

## மும்பையில் பிரதமர் மோடி திறந்து வைத்த நாட்டின் நீளமான கடல் பாலம் - முக்கிய அம்சங்கள் என்னென்ன?


அடல் சேது பாலம்

**புதுடெல்லி:** நாட்டின் நீளமான மும்பை டிரான்ஸ் துறைமுக இணைப்பு கடல் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். இந்தப் பாலத்துக்கு அடல் பிகாரி வாஜ்பாய் செவ்ரி - நவ சேவ் அடல் சேது எனப் பெயரிடப்பட்டுள்ளது. தெற்கு மும்பையை நவி மும்பையுடன் இணைக்கும் இந்தப் பாலத்தின் மூலமாக இரண்டு மணி நேரப் பயணம் இனி 15 - 20 நிமிடமாக குறைக்கப்படும்.

சுமார் 21.8 கி.மீ. நீளம் கொண்ட இந்தப் பாலம் ரூ.17,840 கோடிக்கும் அதிகமான செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலத்துக்கான வேலைகளை கடந்த 2016-ம் ஆண்டு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். கட்டுமானப் பணிகள் கடந்த ஏழு ஆண்டுகளாக நடந்து வந்தன. இந்தப் பாலம் மும்பை சர்வதேச விமான நிலையத்துக்கும், நவி மும்பை சர்வதேச விமான நிலையத்துக்கும் இடையிலான இணைப்பை மேம்படுத்தும். அதேபோல், மும்பையில் இருந்து புனே, கோவா மற்றும் தென்னிந்தியாவுக்கான பயண நேரத்தையும் குறைக்கும். கூடுதலாக மும்பை துறைமுகத்துக்கும் ஜவஹர்லால் நேரு துறைமுகத்துக்கும் இடையிலான இணைப்பையும் இப்பாலம் மேம்படுத்துகிறது.

ஆறு வழி கடல் இணைப்பாக இருக்கும் இந்த மும்பை டிரான்ஸ் துறைமுக இணைப்பு பாலம் சுமார் 16.50 கிலோ மீட்டர் கடலிலும், 5.50 மீட்டர் நிலத்திலும் கட்டப்பட்டுள்ளது. இருசக்கர வாகனங்கள், ஆட்டோ, டிராக்டர்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தில் நான்கு சக்கர வாகனங்கள் 100 கி.மீ. வேகத்தில் செல்லலாம். பாலத்தில் ஏறும் போதும் இறங்கும் போதும் உச்ச வேக வரம்பு 40 கி.மீ. ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜன.4-ம் தேதி மகாராஷ்டிரா அரசு இந்தப் பாலத்தில் ஒரு வழியில் பயணம் செய்வதற்கு காருக்கு ரூ.250 சுங்கக் கட்டணம் வசூலிக்கும் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்தது. பாலத்தில் ஒரு முறை சென்று வர காருக்கு ரூ.375 கட்டணம் வசூலிக்கப்படும். தினசரி மற்றும் மாதாந்திர பாஸ்கள் முறையே ரூ.625 மற்றும் ரூ.12,500 என நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

தானியங்கி சுங்க வசூல் மற்றும் சிறந்த போக்குவரத்து அமைப்பு போன்ற மேம்படுத்தப்பட்ட வசதிகளை உள்ளடக்கியுள்ள இந்தப் பாலம் இந்தியாவிலேயே முதல்முறையாக ஆர்தோட்ரோபிக் ஸ்டீல் டெக் ஸ்பேன்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது கப்பல் வழித்தடங்களை தடுக்கும் தூண்களுக்கான தேவையில்லாம் நீண்ட தூரம் பயணம் செய்வதற்கு துணை புரிகிறது. மேலும் இந்தப் பாலத்தில் உள்ளூர் வன உயிரிகளைக் பாதுகாக்கும் வகையில் ஒலி மற்றும் ஒளித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

EVA STALIN IAS ACADEMY